# சோழமண்டலம் நிதி நிறுவன லாபம் ரூ. 111 கோடி

**சென்னை, ஜூலை 31:** சோழமண்டலம் இன்வெஸ்ட்மென்ட் & ஃபைனான்ஸ் நிறுவனத்தின் முதல் காலாண்டு நிகர லாபம் 16 சதவீதம் வளர்ச்சி பெற்று, ரூ. 111.10 கோடியாக உள்ளது என அந்த நிறுவனம் தெரிவித்தது.

மும்பை பங்குச் சந்தைக்கு அந்நிறுவனம் அளித்துள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

ஏப்ரல்-ஜூன் காலாண்டு நிகர வருவாய் ரூ. 986.70 கோடியாக உயர்வு பெற்றது. கடன் அளிப்பு ரூ. 3,508 கோடியாகும். முந்தைய ஆண்டைக்காட்டிலும் இது 10 சதவீதம் கூடுதலாகும். நிகர லாபம் 16 சதவீதம் அதிகரித்து ரூ. 111.10 கோடியாக உள்ளது.

கடந்த நிதி ஆண்டில் மொத்த வருவாய் ரூ. 3,688.50 கோடியாக இருந்தது. நிகர லாபம் ரூ. 444.14 கோடியாகும் என அந்நிறுவனம் தெரிவித்துள்ளது.

நிறுவனத்தின் நிர்வாக இயக்குநராக வெள்ளையன் சுப்பையாவை மீண்டும் நியமிக்க, நிர்வாகக் குழு ஒப்புதல் அளித்ததாக, மும்பை பங்குச் சந்தைக்கு அளித்துள்ள மற்றொரு அறிக்கையில் அந்த நிறுவனம் தெரிவித்தது.